பரிசீலிக்க வேண்டும். உடனடித் தேவைக்காக இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நீண்ட காலத் தேவைக்காக ஒரு ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் கே. என். குமாரசாமி, ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

(ஆ) பல்லடம் லட்சுமி மில்லில் நடந்துவரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தத் தீர்மானம் கொடுத்து ஒரு மாதமாகிவிட்டது. ஆகவே, இரண்டு மாதமாக இருக்கிறது என்பதை மூன்று மாதங்கள் என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் பல்லடம், லக்ஷ்மி மில்லில் மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதும், மில் நிர்வாகம் மில்லில் புதிய ஆட்களை வாச்மேன்களாகப் போட்டு கெடுபிடி செய்வதும், லையன்களில் குடியிருப்பவர்களை வேலைக்குச் செல்ல நிர்ப்பந்திப்பதுமான நிலை உருவாக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சத்திற்குள்ளாகி இருக்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அண்மையில் பல்லடம், லக்ஷ்மி மில்லில் மூன்று மாதகாலமாக வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறுவதும், மில் நிர்வாகம் மில்லில் புதிய ஆட்களை வாச்மேன்களாகப் போட்டு கெடுபிடி செய்வதும், லையன்களில் குடியிருப்பவர்களை வேலைக்குச் செல்ல நிர்ப்பந்திப்பதுமான நிலை உருவாக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அச்சத்தற்குள்ளாகி இருக்கும் நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, பல்லடத்திலுள்ள லட்சுமி மில் தொழிலாளர்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காக 4—1—1974 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்: (i) ரீலிங் இலாகாவில் வேலைப்பளு அதிகரிப்பு, ( ) பத்தொன்பது தொழிலாளர்கள் விசாரணைக்காக தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பது.

கோவை தொழிலாளர் துணை உதவி ஆணையர் இப்பிரச்சனை சம்பந்தமாக சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினர். உடன்பாடு ஏற்படாததால் அவர் 15—2—1974-ல் சமரச முறிவு அறிக்கை அனுப்பிவைத்தார். ரீலிங் இலாகாவில் இழை உண்டுபண்ணும் பகுதியில் (Stable fire unit) எவ்வளவு வேலைப்பளு கொடுக்க வேண்டும் என்ற முக்கிய கோரிக்கை 30—3—1974 நாளிட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை அரசு ஆணை எண் 603-ல் கோவை தொழிலாளர் கோர்ட்டு தீர்ப்பிற்காக விடப்பட்டிருக்கிறது.

பத்தொன்பது தொழிலாளர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப் பட்டிருப்பது சம்பந்தமாக இன்னும் விசாரணை முடிவுறவில்லையாகையால் அதன்மீது இந்நிலையில் நடவடிக்கை எடுக்க இயலாது. வேலைநிறுத்தம் இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முக்கிய கோரிக் கையை தீர்ப்பிற்கு விட்டிருப்பதால் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி சுமுகமான நிலையை சீக்கிரம் ஏற்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

மில்லில் புதிய ஆட்களை வாட்சுமேன்களாகப் போடுவது காலனி லையன் களில் குடியிருப்பவர்களை நிர்ப்பந்திப்பது சம்பந்தமாக, நிர்வாகம் கோவில் பட்டியிலிருந்து சில வாட்சுமேன்களை கோவை பல்லடம் மில்லில் எந்த சூழ் நிலையையும் சமாளிப்பதற்காக மாற்றம் செய்ததாகத் தெரிய வருகிறது. லையன் களிலே குடியிருப்பவர்களை நிர்பந்திப்பது சம்பந்தமாக எந்தவிதமான புகாரும் தொழிலாளர் துறை ஆணையர் அலுவலகத்திற்கு வரவில்லை.

இந்தத் தகராறு தொழில் கோர்ட் தீர்ப்பிற்கு விடப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, வேலைப்பளு சம்பந்தமாக இரண்டு தொழிலாளர்கள் பேரில் முதலில் ஆட்சேபனை வந்தது. அது சம்பந்த மாக மேனேஜ்மெண்ட்டார் அவர்களுக்கு. நோட்டீஸ் கொடுத்தோ, அல்லது என்கொயரி வைத்தோ அவர்கள் கேட்க மறுத்திருந்தால் அவர்களை டிஸ்மிஸ் செய்திருக்கலாம். ஆனல், எடுத்தவுடனேயே வெளியிலே உள்ள தொழிலாளி கள் புகார் செய்தார்கள் என்ற பொய்யைச் சாக்காக வைத்துக்கொண்டு தொழிலாளர் சட்டத்திற்கு விரோதமாக எடுத்தவுடனேயே அந்த இரண்டு தொழிலாளர்களையும் சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். கேட்டால், அப்படித் தான் என்று பேசுகின்ற அளவிற்குத் தைரியம் அவர்களுக்கு எதனல் வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை.

அன்றாடத் தொழில் தகராறுகள் சட்டத்திற்கு விரோதமாக செய்திருப்ப தால் அதை ஆட்சேபனை செய்வதற்காக தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய் கிறார்கள். அதனால் இன்றைக்கு 27 பேர், எல்லாச் சங்கங்களையும் சேர்ந்த முக்கிய லீடர்ஸ் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்பதற்காக ஏதாவது வேண்டுமானால் சொல்லுங்கள், புதிய கருத்துக்களைச் சொல்ல வேண்டாம்.

திரு. கே. என். குமாரசாமி: வேண்டுமென்றே இப்படிப் பழி வாங்கி விட்டால் ஆலைத் தொழிலாளர்கள் மேனேஜ்மெண்டார் சொல்வதைக் கேட் பார்கள் என்ற காரணத்திற்காக வேண்டுமென்றே 29 பேர்களைப் பழி வாங்கி யிருக்கிறார்கள். இது தொழில் தகராறுகள் சட்டத்திற்குப் புறம்பாக சர்வாதிகாரத் தன்மையோடு மேனேஜ்மெண்டார் நடக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதிலே தொழிலாளர் களுக்கு நியாயம் வழங்கவில்லையென்றால் நிலைமை மிகவும் மோசமாகப் போகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 100 நாட்களுக்குப் பிறகு, முன்பே பட்டினி போட்டு எந்தவிதமான . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல் 41-லே இரண்டு கேள்விகள் விளக்கம் பெறுவதற்காக இருக்கிறது அதை வேறு விவாதத்திற்கு, மற்றக் கருத்துக்களைச சொல்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

திரு. கே. என். குமாரசாமி: அவர்கள் பட்டினியாக இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஏதோ லாக் லோட் என்பதுபற்றி தொழில் கோர்ட்டுக்கு விடப்பட்டிருப்பதாக, தொழிலாளர் தரப்பில் ஏற்றுக்கொண் டாலும், 29 பேர்களையும் வேலைக்கு அனுமதிக்க அமைச்சரவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அங்கிருக்கிற நிர் வாகம் இரண்டு பேரை நீக்கியிருக்கிறது என்று சொன்னார்கள். பத்தொன்பது தொழிலாளர்கள் பேரிலே தொழில் கோர்ட்டிலே பிரச்னையிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அது பற்றிய முழு விவரங்களையும் நான் கேட்கிறேன்.

அந்த நிர்வாகம் மிகவும் தைரியமாக இரண்டு பேரை நீக்கியதற்குக் காரணம் புரியவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரசாமி அவர் கள் கூறினார்கள். நிர்வாகத்தினர் அப்படிப்பட்ட தைரியத்தோடு இருப்ப

தற்கு இந்த அரசாங்கம் எந்தத் தைரியத்தையும் கொடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் தைரியம் இங்கேயிருந்து சப்ளை செய்யப்படுவதில்லை என்பதை மட்டும் தெரிவித்து, தொழிலாளர் பிரச்னையில் என்ன நியாயம் உண்டோ அவற்றை அரசு அலசிப் பார்த்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தத் தொழில் தகாறுக்கு ஆரம்ப காரணமாக இருந்த பிரச்னையை கோர்ட்டுக்கு விட்டிருப்பதாகவும், அரசு தலையிடுவதில்லை என்பதுபோலவும் அமைச்சரவர்கள் கூறினர்கள். அடிப்படை பிரச்னை என்னவென்றால் 28 பேர்களை பழிவாங்கியிருப்பதாகும். முதலிலே இரண்டு பேராக இருந்து படிப்படியாக அன்றாடம் ஒருவர் இருவர் என்று ஏறி 28 ஆக ஆகியிருக்கிறது. இனிமேல் எவ்வளவு ஆகும் என்று தெரியாது. நான் ஏன் பயப்படுகிறேன் என்றால், அரசு இதிலே தலையிடுவதற்கு ஏற்படுகின்ற தாமதத்தைப் பயன்படுத்திக்கொண்டு—அமைச்சரவர்கள் கூறினர்கள் நாங்கள் தைரியத்தை சப்ளை செய்வதில்லை என்று, அது உண்மை, நான் அதை ஒத்துக் கொள்கிறேன்—ஆனால் அரசாங்கம் எஃபெக்டிவ்வாக, சரியாகத் தலையிடுவதற்கு ஏற்படுகின்ற தாமதத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு தைரியமாக, மேனேஜ்மெண்டார் மேலும் பலரைப் பழிவாங்கி எண்ணிக்கையை அதிகப்படுத்திவிட்டால் தலைவர்களையும், மற்றவர்களையும் பழிவாங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற நம்பிக்கையில் அவர்கள் செய்வதைப் போல் தோன்றுகிறது. ஆகவே அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும், இது நீடித்தால் பிரச்னை மிகப்பெரிய அளவில் போய்விடும். காரணம் என்னவென்றால், அனைத்துச் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். மற்றத் தொழிற்சாலைகளில் இருப்பவர்கள் இந்தத் தொழிலாளர்கள் பழிவாங்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு பேசாமல் இருக்க மாட்டார்கள். எனவே, அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு இந்தப் பிரச்னையைத் தீர்த்து வைத்து, அந்தத் தொழிலாளர்கள் நிர்வாகத்தால் பழிவாங்கப்படுவதைத் தடுத்து நிறுத்தி, தொழிலாளர் நலத்திற்கேற்ற வகையில் நல்ல பணிகளை அவசரமாகச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலையிட்டாலே இந்தப் பிரச்னை அநேகமாக முடிந்துவிடும். யாரையும் பழி வாங்க வேண்டியதில்லை. எங்களுக்கு யாரையும் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை. பிரச்னை அவர்களுக்கும் எனக்கும் மத்தியில்தான் இருக்கிறது. விரைவில் நாங்கள் கூடி இதற்குச் சுமுகமான ஏற்பாடுகளைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.